# முதல் பருவத் தேர்வு - 2022

6 - ஆம் வகுப்பு **சமூக அறிவியல்** காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

**I சரியான விடையைத் தேர்வு செய்க.** 5 X 1 = 5

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
   அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
   இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்
2. தான்சானியா ........................ கண்டத்தில் உள்ளது.
   அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா
3. சிந்து வெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது?
   அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
   இ) புதிய கற்காலம் ஈ) உலோககாலம்
4. மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள்
   அ) செவ்வாய் ஆ) சந்திரன் இ) புதன் ஈ) வெள்ளி
5. அதிகமான கப்பல் போக்குவரத்து நடைபெறும் பெருங்கடல்
   அ) பசிபிக் பெருங்கடல் ஆ) அட்லாண்டிக் பெருங்கடல்
   இ) இந்தியப் பெருங்கடல் ஈ) ஆர்க்டிக் பெருங்கடல்

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

6. வரலாற்றின் தந்தை...............
7. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ............... என்னுமிடத்தில் காணப்படுகிறது.
8. சூரியக்குடும்பத்தின் மையம் ...............
9. தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு ...............
10. பெருங்கடல்களில் மிகப்பெரியது ...............

**III பொருத்துக.** 5 X 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 11. | அசோகர் | - | செவ்வாய் |
| 12. | மொஹஞ்ச தாரோ | - | பசிபிக் பெருங்கடல் |
| 13. | செந்நிறக் கோள் | - | இறந்தோர் மேடு |
| 14. | மரியானா அகழி | - | மதம் |
| 15. | ஜொராஸ்ட்ரியம் | - | மிகவும் புகழ்பெற்ற அரசர் |



Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

IV **சரியா? தவறா?** 5 X 1 = 5

16. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.
17. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும்.
18. தானியக் களஞ்சியம் தானியங்களைச் சேமித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.
19. முதல் எழுத்துமுறை சீனர்களால் உருவாக்கப்பட்டது.
20. நாணயங்களை ஆராய்வதற்கான துறை மானுடவியல் ஆகும்.

V **ஓரிரு வார்த்தைகளில் விடையளி. (ஏதேனும் ஐந்து மட்டும்)** 5 X 2 = 10

21. வரலாறு என்றால் என்ன?
22. ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் இரு பண்புகளை எழுதுக.
23. சிந்து வெளி நாகரிகம் வெண்கல கால நாகரிகம் என ஏன் அழைக்கப்படுகிறது?
24. புவி ஒரு கோளம் தட்டையாகக் கருதப்படவில்லை, காரணம் தருக.
25. அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லைகளாக உள்ள கண்டங்கள் யாவை?
26. பரப்பளவின் அடிப்படையில் கண்டங்களின் பெயர்களை வரிசைப்படுத்தி எழுது?
27. பன்முகத்தன்மையினை வரையறு.

VI **விரிவான விடையளி.** 2 X 5 = 10

28. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப் பார்.
29. உட்புற மற்றும் வெளிப்புறக் கோள்கள் - வேறுபடுத்துக.

VII **கீழ்க்கண்ட பகுதிகளைக் கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.** 5 X 1 = 5

1) மொஹஞ்ச - தாரோ
2) சான்குதாரோ
3) ஹரப்பா
4) மெஹர்கர்
5) லோத்தல்

VII **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பெருங்கடல்கள், கண்டங்களை குறிக்கவும்.** 5 X 1 = 5

1) பெருங்கடல்கள் : பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல்.
2) கண்டங்கள் : ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா.



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com